ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2139/50 - 2019 සැප්තැම්බර් මස 04 වැනි බදදා - 2019.09.04

*2139/50 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: GCF/ATH/KD/23/LR.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின்
இல.: 13/97/LRB/360.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

(பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல், சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ், பாராளுமன்ற வாவிக்கு மேற்பக்கமாக நீரைத் தேக்கி வைப்பதற்கான பிரதேசமொன்றிற்காக காணித் துண்டுகளை அரசுக்கு எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கடுவளை பிரதேச செயலாளர் பிரிவில், கடுவளை மாநகர சபை எல்லைக்குட்பட்ட இல. 479/F, அருப்பிட்டிய கிராம அலுவலர் பிரிவில், பெலவத்தை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.01.31 ஆந் திகதிய கொ : 9790 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1, 2 எனக் காட்டப்பட்ட 0.1892 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட இரண்டு (02) காணித் துண்டுகள் :

**01. துண்டு இல. 1**
காணியின் பெயர் : தெரியாது; விபரம் : வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : டபிள்யூ. கே. ஜீ. என். பெரேரா, இல. 47/50, பெரேரா மாவத்தை, தலங்கமை தெற்கு, பத்தரமுல்லை; விஸ்தீரணம் : 0.1629 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 2**
காணியின் பெயர் : தெரியாது; விபரம் : வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : வெலகடகே பத்ரா ரோஹன பெரேரா, இல. 41/1, பாகொடை வீதி, நுகேகொடை; விஸ்தீரணம் : 0.0263 ஹெக்டயார்.

1A - G 30899 - 17 (2019/09)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு, இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள, இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனத்தின் பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல், சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சீ. டபிள்யு. அபேசூரிய,
காணி எடுத்தல் அலுவலர்,
பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்,
கடுவெல பிரதேச செயலாளர் பிரிவு.

பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி
எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை, இராஜகிரிய,
2019, செத்தெம்பர் 03.

9 - 628

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.